தினமணி
நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# சங்கர நேத்ராலயா அகாதெமியில் மருத்துவம் சார்ந்த படிப்புகள்

18 June 2013 05:24 AM IST

சங்கர நேத்ராலயா அகாதெமியில் மருத்துவத்துறை சார்ந்த புதிய படிப்புகளை தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அனைத்து சுகாதார சேவைகள் பற்றிய படிப்புகளை வழங்குவதே சங்கர நேத்ராலயா அகாதெமியின் நோக்கமாகும். சுகாதாரத்துறையில் மனிதவளம் மற்றும் ஊழியர் பற்றாக்குறையைக் களைய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் நிபுணர் குழு மருத்துவத்துறை சார்ந்த புதிய படிப்புகளை இந்தக் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

கண் மருத்துவ செவிலியர் உதவியாளர், ஆப்பரேஷன் தியேட்டர் மற்றும் மயக்க மருந்தியல் தொழில்நுட்ப பிரிவுகளில் 2 ஆண்டு டிப்ளமோ படிப்புகள், 3 ஆண்டு பட்டப்படிப்பான பி.எஸ்.சி. மெடிக்கல் லேப் டெக்னாலஜி ஆகிய படிப்புகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்புகளில் சேர, பிளஸ் 2-ல், இயற்பியல், வேதியியல், கணிதம் அல்லது உயிரியல் பாடங்களில் நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தை www.thesnacademy.ac.in என்ற வலைத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

http://dinamani.com/education/education_news/2013/06/18/சங்கர-நேத்ராலயாவில்-மருத்த/article1640640.ece